சார்பு நீதிமன்றம், பண்ருட்டி. நாள்:08.07.2025

O.S. No.229/2019

வா.சா.1 - வெங்கடேசன்

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 08 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய வா.சா.1ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டத்தின் 4வது பிரிவின் கீழ் திரு. ஜெ.அன்வர் சதாத்,பி.காம்., எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்திய பிரமாணத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 ஆவணம் நீதிமன்றம் சாரா முத்திரை தாளில் எழுதப்படவில்லை என்றாலும், பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தை ஒப்புதல் கொடுத்துள்ளதாக வாசகம் ஏதேனும் உள்ளதா என்றால் அவ்வாறு வாசகம் ஏதும் இல்லை.

2. வா.சா.ஆ.1 யை எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் பாஸ்கர் என்பவர் 11.04.2010 தேதியன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி தேதியில் பாஸ்கர் இறந்த பின்பு 9 ஆண்டுகள் கடந்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தை பாஸ்கர் எழுதி கொடுக்கவில்லை என்றாலும், நானே எனக்கு வேண்டிய நபர்களை வைத்து எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

3. நான் வா.சா.ஆ.1 எழுதிக்கொடுக்கவில்லை என்றும், காலம் கடந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகர்ந்தது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் கூறியுள்ள அம்சங்கள் அனைத்தும் வழக்கு தாக்கல் செய்வதற்காக பொய்யான மற்றும் மாயேயான வழக்குமூலத்தை பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

4. வழக்கு பிராதில் கூறியுள்ள சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தமிழ்செல்வி என்பவர் எனக்கு சகோதரி ஆவார். மாரியம்மாள் எனது மூத்த

சகோதரி ஆவார். 2,3 பிரதிவாதிகள் மாரியம்மாளின் பேத்திகள் என்றால் சரிதான். பாஸ்கர் என்பவர் மாரியம்மாளின் மகன் ஆவார். 1ம் பிரதிவாதி 19.07.2019 அன்று 2,3 பிரதிவாதிகளிடமிருந்து ரூ.7 லட்சத்திற்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் வழக்கு சொத்து 2,3 பிரதிவாதிகளுக்கு பாத்தியமே இல்லை என்று சாட்சி கூறுகிறார்.

5. வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்து பாஸ்கருக்கு உரிமையானது என்றும், பாஸ்கர் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகள் 2,3 பிரதிவாதிகள் வழக்கு சொத்து கிடைக்கப்பெற்று உரிமையின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்என்றால் சரியல்ல, பாஸ்கர் என் பெயருக்கு வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என சாட்சி கூறுகிறார்.

6. வா.சா.ஆ.1 ஆவணம் பாஸ்கர் எழுதி கொடுத்தது அல்ல என்றாலும், அதில் உள்ள கையொப்பம் பாஸ்கருடையது அல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை கிரையம் கொடுப்பதற்கு முன்பாக அதற்கான மூல ஆவணங்கள் காணாமல் போய்விட்டதால் 2,3 பிரதிவாதிகள் மருங்கூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, Non traceable சான்று பெற்று அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, மூல பத்திரங்கள் அனைத்து அசல் ஆவணங்களையும் என்னிடம் கொடுத்து தான் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்தார் என சாட்சி கூறுகிறார்.

7. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் விபரங்களை நான் என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. 19.07.2019 தேதியிலேயே 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளிடம் கிரையம் பெற்று, கிரையம் பெற்ற தேதியிலிருந்து நாளது தேதி வரையில் தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பாக சம்மந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கம் பார்த்து, வருவாய் ஆவணங்களை பார்வையிட்டு, தாவா சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், 1ம் பிரதிவாதி நல்லெண்ண கிரையதாரர் என்றாலும் சரியல்ல.

8. தாவா சொத்து என்னிடம் ஒப்புக்கொடுத்தாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு காலவறையறையால் பாதிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும்

பொய்யான வழக்குமூலத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.1 உள்ள கையொப்பம் பாஸ்கர் என்பவருடைய கையொப்பம் அல்ல என்றும், நானே எனது வேண்டப்பட்டவரின் துணை கொண்டு வா.சா.ஆ.1 ஆவணத்தையும் பாஸ்கரின் கையொப்பத்தையும் புனைந்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக, கிரைய ஒப்பந்தத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் கிரையம் கொடுப்பவரும், கிரையம் வாங்குபவரும் கையொப்பம் செய்வார்கள் என்பது வழக்கம் என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் அவ்வாறு காணப்படவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல.

10. நான் தவறான நோக்கத்துடன் இந்நீதிமன்றத்தை அனுகியதால், வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம், வா.சா.ஆ.4 ஆவணம் அறிவிப்பு இந்த பிரதிவாதிக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஒப்புகை அட்டையில் உள்ள கையொழுத்து 1ம் பிரதிவாதியுடைது அல்ல என்றால் சரியல்ல. நானே எனக்கு வேண்டப்பட்டவரின் துணை கொண்டும், எனது செல்வாக்கை பயன்படுத்தியும் 1ம் பிரதிவாதியின் கையொப்பத்தை வா.சா.ஆ.5 புனைந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ.8 முதல் 12 வரையான ஆவணங்கள் இவ்வழக்கு கோப்புக்கு தொடர்புடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13,14 ஆவணங்கள் வழக்கிற்காக என்னால் ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.